REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 255

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: பங்குனி 27உ. வெள்ளி (9—4—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 28உ. சனி (10—4—54)

புதுவையில் திராவிடர் முழக்கம்

குருதி யோடும் வீதியில் முரசு கொட்டும் வீரர்கள்

கவர்னர் மேனர் பேயாட்டம்

விடுதலைப் போரின் முன்னணியில் தி. மு. கழகம்

புதுவை, ஏப். 8—

"புதுவையில் நடக்கும் புரட்சிப் போரின் இரண்டாம் நாள், டூப்ளே வீதியில் குருதியைக் கொட்டிக் காண்பித்திருக்கிறது. பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிரதிநிதி கவர்னர் மேனர் குருப்புகளை ஏவி, உரிமை முழக்கமிட்டுச் சென்ற தி. மு. கழகம், இளைஞர் காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சி ஆகியோராடங்கிய ஊர்வலத்தைத் தாக்கியதின் பலனாக ஏராளமானவர் காயமடைந்தனர்; நூறுபதுக்கு மேற்பட்டவர் கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். 'அதிகார வெறியர்களுக்கு அஞ்சி அடிமைகளாக வாழோம்' என்ற உரிமைக் குரல் எழுப்பியவண்ணம் பிரெஞ்சிந்திய மக்கள் பவனி வருகின்றனர்."

"இந்தியாவுடன் இணைந்தே தீருவோம்" என்று பிரெஞ்சுப் பிடியிலுள்ள புதுச்சேரி மக்கள் துவங்கியுள்ள போராட்ட இயக்கம் விறுவிறுப்புடன் உள்ளது.

அதிகார வெறியர்கள், அமைதியாக உரிமைக் குரல் எழும்பும் உத்தமர்தம் குரல்வளையை அடக்குமுறையால் அடக்கி ஒடுக்கிவிட வழக்கம் போல எண்ணி வேகமாக ஈடுபட்டனர்.

கால்களை ஒடித்தனர்; கைகளை முறித்தனர்; பச்சை இரத்தம் பரிமாறப்பட்டது— புதுவையின் வீதிகளிலே!

என்றாலும், 'கலங்கோம். அடிமை விலங்கொடிப்போம்' என வீர முழக்கமிட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் இளைஞர் காங்கிரஸ், கம்யூனிஸ்டு தொண்டர்கள் ஊர்வலமாக 'உரிமை முழக்கமிட்டுச் சென்றனர்.

ஊர்வலம் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கால்கோள் விழாவை இந்திய மண்ணிலே நடத்திய டியூப்ளேயின் சிலையால் உள்ள தெருவை அடைந்ததும், ஆதிபத்திடக்காரரின் அடக்குமுறை அம்புகளாம்— போலீசார் தடுத்தனர்; இழுத்துச் சென்றனர்; ஊர்வலத்தில் கலந்துகொண்ட வீரர்களைத் துவைத்தனர். அவர்கள் வைத்திருந்த கொடிகளைத் தீக்கிரையாக்கினர்.

இவற்றிற்கெல்லாம், சைகோனிலிருந்து விடுமுறையில் வந்திருந்த பிரெஞ்சுத் துருப்புகளும் உதவினவாம்.

இன்றைய ஊர்வலத்தை ஜகன்னாத முருகேசன் என்பார் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். அவர் பிரெஞ்சு இராணுவத்தில் வேலை பார்த்து வந்தார். அவரை மீண்டும் இந்தோ-சீனாவில் இராணுவ உத்தியோகமொன்றை ஏற்றுக்கொள்ளுமாறு, பிரெஞ்சு அரசாங்கம் இரண்டொரு தினங்களுக்கு முன் கேட்டிருந்தது; ஆனால், தோழர் ஜகன்னாத முருகேசன் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து, விடுத்திருந்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டதாவது:—

"சுயமரியாதையுடன் வாழ்வேன்; விடுதலை இயக்கத்தில் சேர்ந்து நாட்டிற்காக பணி புரியச் செல்கிறேன்," என்று கூறியுள்ளார்.

நேற்றுக் கைது செய்து இரவில் வெகு நேரம் கழித்து விடுதலைசெய்யப்பட்ட தோழர்களில் அறுவருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன.

ஐக்கிய முன்னணி அமைக்க முயற்சி

1948 புதுவை சுதந்திரப் போரில் ஈடுபட்டு புதுவையிலிருந்து போய் சென்னை, பம்பாய், மதுரை, ஆமதாபாத் முதலிய ஊர்களில் வாழும் 10,000 பிரெஞ்சிந்திய அகதிகளை மீண்டும் சுதந்திரப் போரில் வந்து கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போரைத் தீவிரமாக நடத்த கூட்டு முன்னணி அமைக்க முயற்சி நடைபெறுவதாகத் தெரிகிறது.

காரைக்காலில் விடுதலை முழக்கம்

காரைக்கால், ஏப். 8—

காரைக்கால் பகுதியை பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுவித்து சர்வஜன வாக்கெடுப்பின்றியே இந்திய யூனியனில் இணைப்பதற்கான அமைதியான போராட்டம் உடனடியாக ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டர்களுக்கு தண்டனை

காரைக்கால், ஏப். 8—

போலீசாரைப் பயமுறுத்தியதாகவும், இணைப்பு கோரி ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் யுவர் லீகைச் சேர்ந்த பி. மீனாட்சி சுந்தரம், எ. பொய்யாமூர்த்தி, எம். செல்வராஜ் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டு மாஜிஸ்திரேட்டால் விசாரிக்கப்பட்டு, பொய்யாமூர்த்தியை விடுதலை செய்தார். மற்ற இருவருக்கும் தலா 15 தினம் சிறை தண்டனையும், 16 பிராங் (சுமார் ரூ 10) அபராதமும் விதிக்கப்பட்டது.

"ஜனநாயகப் பண்புக்கே விரோதமான தீர்மானம்!"

—(:)—

"பொதுப் பிரச்சினைகளில் கட்சி வேறுபாடுகளை களைந்தெறியவேண்டும்"

—(:)—

டில்லி தீர்மானம் பற்றி தேவ் விளக்கம்

பூனா, ஏப் 8—

நாட்டின் எல்லைகளை மாற்றியமைக்கும் வேலைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் எல்லைக் குழுவின் முன்னிலையில் காங்கிரஸ்காரர்கள் மாற்றுக் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு சாட்சியம் சொல்லச் செல்வதோ, அறிக்கை சமர்ப்பிப்பதோ கூடாது என்று சமீபத்தில் டில்லியில் கூடிய காங்கிரஸ் செயற் குழு முடிவு செய்தது நினைவிருக்கலாம்.

"இந்த விதமான தீர்மானம் ஜனநாயகப் பண்புக்கே விரோதமானது என்பதோடு, கல்யாணி காங்கிரசில் எடுத்த முடிவுக்கும் நேர்மாறானதாகும்," என்று கூறினார் முன்னாள் காங்கிரஸ் காரியதரிசியும், சம்யுக்த மகாராஷ்டிர குழுவின் தலைவருமான சங்கர் ராவ் தேவ்.

"நாட்டிற்குப் பொதுவான விஷயங்களில் கட்சி வேறுபாடுகளைக் களைந்த நிலையில் கூடிப் பேசுவதுதான் சரியே ஒழிய, காங்கிரஸ்காரர்கள் மாற்றுக் கட்சிகளுடன் சேர்ந்து பொது விஷயத்திற்காக வாதிடுவது தவறு என்று கூறுவது ஜனநாயகத்திற்கே முரணானது.

பம்பாய், வியாபபடி மகாராஷ்டிரத்தை சார்ந்தது. சென்னை தமிழருக்கும், கன்

(4-ம் பக்கம் பார்க்க)

மக்களின் விருப்பத்தை மதிக்காத ஆட்சி மண்ணைத்தான் கவ்வும்!

—o—

பாக். அ. நி. சபையில் கபார்கான் எடுத்துக்காட்டு!

கராச்சி, ஏப். 8—

மேற்கு பாகிஸ்தானில் புதுத் தேர்தல் நடத்தினால் கிழக்கு பாகிஸ்தானில் நடந்தது போலவே லீக் மண்ணைக் கவ்வும் என்றும், எல்லைப்புற மாகிலத்தில் தேர்தல் நடத்தினால் செஞ்சட்டையினர் வெற்றி பெறுவது உறுதி என்றும், பாகிஸ்தான் அ. நி. சபைக் கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்று பிரேபித்துப் பேசுகையில் கான் அப்துல் கபார்கான் கூறினார்.

பாகிஸ்தானின் மெஜாரிட்டி மக்கள் கிழக்கு வங்கத்தில் வாழ்கிறார்கள் என்றும், மெஜாரிட்டியினரின் விருப்பத்திற்கு மாறான அரசியல் திட்டத்தைத் தயாரிப்பது ஜனநாயக முறையல்ல என்றும் சுட்டிக் காட்டினார்.

நாட்டுக்கு தேவையானதா? நலம் தரக் கூடியதா?

—:o:—

புதிய கல்வித் திட்டம் குறித்து ஆந்திரர் கவலை!

சென்னை, ஏப்ரல் 8—

"இந்த புதிய கல்வித் திட்டம் ஆந்திர ராஜ்யத்தின் வளர்ச்சிக்கு தேவையானதா? இந்தத் திட்டம் உண்மையில் கலைக்குதவுமா?"

என்று ஆந்திர அரசாங்கம் நிறுவியிருக்கும் "ஆரம்ப கல்விக் குழு" கேட்டிருக்கிறது.

மொத்தம் 24 கேள்விகள்

(4-ம் பக்கம் பார்க்க)

'காமராசர் முன்புள்ள பிரச்சினை இலகுவானதல்ல!'

சென்னை கவர்னர் தரும் தகவல்

மந்திரி சபைக் குழுவின் பட்டியல் மேலிடத்திற்கு அனுப்ப இயலாது?

சென்னை, ஏப்ரல் 9—

தமிழ் புத்தாண்டுப் பிறப்பன்று, சென்னையில், புதிய மந்திரி சபை பதவி ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கங்களைபொட்டி, ஆச்சாரியார் மந்திரி சபை ராஜினாமா செய்தது; அழைப்பின் பேரில் காமராசர் கவர்னரைச் சந்தித்தார்; 30 நிமிட நேரம் உரையாடல்கள் நடைபெற்றன.

ஆச்சாரியார் மந்திரி சபை ராஜினாமா செய்வதற்கு முன்பு, கடைசி முறையாக எல்லோரும் ஒன்றுகூடி, கவர்னருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

புதிய மந்திரிசபை அமைக்கப்படும் வரையில், பதவியிலிருந்து விலகும் மந்திரிகள், தங்கள் அலுவல்களைத் தொடர்ந்து செய்யும்படி கவர்னர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்களும் சம்மதித்துள்ளனர்.

புதிய மந்திரி சபையைத்

(4-ம் பக்கம் பார்க்க)

அரசாங்க பணத்தில் — மத போதனை வேண்டுமாம்!

பகவன்தாசின் விபரீத யோசனை!

சென்னை, ஏப்ரல் 9—

"நம்முடைய பள்ளிக் கூடங்களில் மதபோதனை தவறாமல் நடைபெற வேண்டும்; அதற்காக ஏற்படும் செலவை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்!'

என்று நேற்று மாலை நடந்த கூட்டத்தில் டாக்டர் பகவன்தாஸ் கூறினார்.

சென்னை - கவர்னர், பிரகாசாவின் தந்தையான பகவன்தாஸ் மேலும் பேசுகையில், "இந்தியாவில் அதிகபட்ச பிறப்புகள் இருக்கின்றன என்றும், அதை குறைக்க கிராமங்களில்கூட 'கர்ப்பத் தடை'ப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

'சுதேசமித்திரன்' ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 9—4—54 வெள்ளி

தஞ்சை வாரீர்!

புதுவையும், காரையும் விடுதலை வீரர்களின் போர்க் களமாகியுள்ளன! எதேச்சாதிகார பிரெஞ்சு ஆதிபத்தியத்தை எதிர்த்து உரிமை வேட்கை கொண்ட திராவிட மக்கள், அறப்போரில் குதித்துள்ளனர்! அடக்குமுறை ஆர்ப்பரிக்கின்றது! சிறைச்சாலைகள் நிரம்பப்படுகின்றன! தடியும் விலங்கும் ஆட்சி செய்கின்றன! தமிழ் மக்கள்—திராவிட இனத்தவர் குருதி கொட்டுகின்றனர்!

'உரிமை என்ன, சுக்கா, மிளகா—சுதந்திரம் எளிதிலே கிடைத்துவிட,' என்று கேட்பது போலத்தான் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்று முழங்கிய பிரெஞ்சு நாட்டார் உரிமைக்குத் துடிக்கும் மக்களை கொடுமைக்கு ஆளாக்கிக் கொண்டுள்ளனர்!

அந்த ஆதிபத்திய திட்டுகளின் அண்மையிலே உள்ளதும், அவை விடுதலை பெற்றபின், அதிலே ஒரு திட்டான காரையைத் தன்னுடைய மாவட்டத்திலே அடக்கிக்கொள்ள வேண்டியதுமான தஞ்சை மாவட்டத்தின் தி. மு. கழக மாநாடுகள்தான், நாளையும், மறுநாளும் தஞ்சையில் கூடுகின்றன.

முதல் நாள் சமூகச் சீர்திருத்த மாநாடும், மறுநாள் அரசியல் மாநாடும், முறையே நண்பர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., 'திராவிடன்' ஆசிரியர் என். வி. நடராசன் ஆகியோர் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் க. அன்பழகன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோரால் துவக்கி வைக்கப்படும்.

இயக்க முன்னணித் தோழர்கள் பலரும், பொதுச் செயலாளரும் கலந்து கொள்வர். சமூகச் சீர்திருத்தத்திற்கு ஏற்ற சிறந்த கருவியாகிய தக்க நாடகங்களும், நல்லிசையும் இடம் பெறுகின்றது.

தி. மு. கழகம் தனது இலட்சியத்தின் வெற்றிக்காக கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகிய தனது கடமைகளினின்றும் தவறாமல், மும்முனைப் போராட்டத்தைத் தொடங்கி, வெற்றிகரமாக நிறைவேற்றியதற்குப் பின்னர் நிகழும் முதல் மாநாடு இதுவாகும்.

புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் என்ற பெயரால், வர்ணாஸ்ரமச் சதி, நமது மக்களை வீழ்த்த முனைந்ததைக் கண்டு நாம் கொதித்தெழுந்தோம்! மறியல் நடத்தினோம்!!

நமது தமிழ் எல்லையின் உரிமையைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது, நாட்டை ஆளும் பொறுப்பேற்றுள்ள பண்டிதர்—சிறு மொழி செப்பினராக—நமது தன்மானத்தைப் புலப்படுத்த, ஜூலை 15-ல், அடையாளப் போராகத் திராவிடமெங்கும் ரயில்களை நிறுத்தத் தீர்மானித்தோம்.

திராவிடம் எழுச்சியுற்றது! எங்கெங்கும் 'ரயில்கள்' நின்றன!!

வடநாட்டார் ஆதிக்கத்தை என்றென்றும் நிலைநாட்டிக்கொள்ள ஏதுவாக—தமிழரின் உரிமையைத் தரைமட்டமாக்க துணையாகக் 'கல்லக்குடி'யை டால்மியாபுரம் என்று வழங்கி வருவதை மாற்றக் கேட்டோம்; ஏற்காமற் போகவே, போர் தொடுத்தோம்!

மூன்று முனைகளிலும் கொள்கை வீரர்கள் அறப்போர் புரிந்தனர்; 'அறத்தினையே' அறியாத ஆணவ ஆட்சி நடாத்திய ஆச்சாரியார், இந்தத் தீர்மானங்களைப் பொருட்படுத்தவில்லை; தலைவர்களை அழைத்துப் பேசவில்லை; ஆனால், தீர்மானங்கள் வெற்றி பெறுமல் இருக்க அரும் பாடுபட்டார்; தலைவர்களை முன்கூட்டியே சிறையிலிட்டார்; அறப்போரின் முன்னணியில் நின்றவர்களைத் தண்டித்தார்; உரிமை உணர்ச்சியை அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற தவறான ஆசையால், எழுச்சி கொண்ட மக்களைச் சுட்டுத்தள்ளவும், தடியால் அடிக்கவும், கொடுமைப்படுத்தவும் ஆணை பிறப்பித்தார்!

வழக்குகள் வளர்ந்தன! தொடர்ந்தன! சிறை, தன் வாயை அகலப் பிளந்தது; அதன் வயிற்றில் இட நெருக்கடி ஏற்படுமளவிற்கு ஆச்சாரியார் ஆட்சியில் சிறைகள் நிரம்பி வழிந்தன—குற்றவாளிகளாலல்ல; தவறு இழைத்தவர்களாலல்ல;—ஆனால், தாய் நாட்டின் உரிமைக்குப் போராடிய உண்மைத் தொண்டர்களால்!

சிறைத் தண்டனை பெற்றிருந்த தலைவர்கள் மீது மேலும் வழக்கு தொடரப்பட்டது; ஆனால், அவ்வழக்கு, நீதிக்கு முன்னர் நிற்க முடியாமல், நழுவிக் கொண்டது.

ஆனால், தொண்டர்களோ, இன்னும் சிறைச்சாலைக்குள்! தூத்துக்குடியிலோ, வழக்கு விசித்திர வடிவத்தையெல்லாம் எடுத்து, நஞ்சைக் கக்கும் நாகமாக ஆகியுள்ளது. நீதிபதியின் தீர்ப்பை நாளை வழங்கப்பட இருக்கிறது. கல்லக்குடி வழக்கில் பலர் சிறையில்! இந்நிலையில், இவ்வழக்குகளில் நீதியைப் பெற, நாம், உயர் நீதிமன்றங்களின் நீண்ட படிக்கட்டுகளில் ஏறி இறங்கியாக வேண்டும்!

அதற்கான பெருஞ் செலவைப் பொதுமக்கள்—தி. மு. கழக உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் — திரட்டித் தந்துள்ளனர். பொதுச்செயலாளரின் வேண்டுகோள் ஏற்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி யளிப்பதே! எனினும், நமது கடமை பெரிதே!

இந்நிலையில்தான், கழகத்தின் வளர்ச்சியில், ஆக்கப் பணியில் முக்கியமானதொரு கட்டத்தில், இம்மாநாடு, அறப் போராட்டங்களுக்குப் பின்னர் கூடுகின்றது.

இந்தப் போராட்டங்கள், உலகின் கண்களுக்கு நம்மைப் புலப்படுத்தியுள்ளது என்பது மட்டுமன்றி, நமது ஆற்றலையும், நமது மாற்றாருக்கு மட்டுமன்றி, நமக்கேயும் புலப்படுத்தியுள்ளது.

நமது நாட்டின் அரசியல் எழுச்சியையும், வரலாற்றையும் தீட்டும் வரலாற்று ஆசிரியர்கள், இதை மகத்தான வெற்றி பெற்றதொரு போராட்டமாகத்தான் சித்தரிப்பர் என்பதில் ஐயமில்லை.

அந்த வெற்றிக்குப் பின்னர்—முதன் முதலாக—நாம் கூடுகிறோம், தஞ்சையில்!

நாட்டின் நிலையை நோக்கினாலோ, ஆச்சாரியார், தழுவிக் கிடந்த அதிகார மோகினியை—கவலையோடுதான் எனினும் —கைவிட்டுச் செல்ல, காமராசர், புது மாப்பிள்ளையாக முன் வந்துள்ளார். காங்கிரசின் இந்த மாற்றம், ஆச்சரியமுமல்ல! அதிகம் பயனை விளைவித்துவிடக் கூடியதுமல்ல! நிரந்தரமுமல்ல! நிம்மதியானதுமல்ல!—என்பதை நாமறிவோம்!

எனினும், ஆச்சாரியார் விளைத்த தவறுகளையேனும், அநீதியையேனும் புதிய மந்திரிசபை துடைக்காதா?—என்று எவரும் எதிர்பார்ப்பது இயற்கையேயாகும்

தாயகத்தில் இடமில்லை இருக்க, தாயகத்தில் வாழ வழியற்று, கண்ணீர் சிந்தியபடி கடல் கடந்து சென்று, ஆங்காங்கு குடியேறியுள்ள திராவிடப் பாட்டாளி மக்களும்—நம் அடிவயிற்றிலே, வளரும் நெருப்பை அணைத்துக் கொள்ளவே அல்லும் பகலும் பாடுபட்டு வந்த போதிலும், ஆங்காங்கிருந்து விரட்டப்படும் நிலை வளர்ந்து கொண்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் வேதனைக்கு ஆளாகி உள்ளனர். அண்மையில் உள்ள இலங்கை—இந்திய சர்க்காரின் இணக்கத்தையும் பெற்றுக் கொண்டு, உரிமையைப் பறிக்கின்றது; மலேயா—அங்குள்ள திராவிடர் வாழ்வைக் கசப்பாக்குகிறது; தென்னாப்பிரிக்காவிலும்—தென்னாட்டார் அவதிக்குள்ளாகின்றனர்; எங்கெங்கே நோக்கினாலும்—இலங்கை, பர்மா, மலேயா, நேட்டால், தென்னாப்பிரிக்கா, சுமத்ரா, ஜாவா, இந்தோனிஷியா முதலிய ஒவ்வொரு பகுதியினின்றும் வருகின்ற செய்திகள்—நம்மை, நமது மக்களை துக்கத்தில்தான் ஆழ்த்துகின்றன.

அவர்களது நிலையோ, நாதியற்ற நங்கையைப் போல் ஆதரவற்ற அபலையைப் போல் காணப்படுகிறது. ஆதரிக்க வேண்டிய திராவிடம், பரிந்து பேச வேண்டிய நமதாட்சி, நம்மிடம் இல்லை; உரிமை நமக்கில்லை; வாழ்வு நம்மவர்க்கில்லை; அந்த வேதனையைத் துடைக்கத்தான், உரிமைப் பரணி பாடுகிறோம், நாம்!

இந்நிலையில்தான், தமிழகத்தின் எல்லைகளில், மொழி காரணமாகச் சிறு சிறு தொல்லைகளும் வளருகின்றன. திராவிட இனத்தையும், தமிழ் மொழியின் தொடர்பையும் அறியாதவர்களால், ஏற்படுவதுதான் அத்தொல்லைகள்—எனினும், மொழி வழி எல்லைகள் தீர்மானிக்கப்பட வேண்டிய கட்டம் மிக மிக நெருங்கி வருகின்றது

ஆளவந்தார் அந்தப் பிரச்னையை அலட்சியம் செய்யவும், அதிகாரம் காட்டி மிரட்டவும், கட்சிக் கட்டுப்பாடு கூறி ஒடுக்கவும், குழுவினைக் கொண்டு குளறவும் வழி தேடுகின்றனர். என்றாலும், மக்களின் இயற்கையான விருப்பமாகிய மொழி வழி எல்லைகள் அமைந்தே ஆகவேண்டும். நாமும் நமது பங்கை, கடமையைச் செய்யத் தீர்மானித்துள்ளோம்.

இத்தகு முக்கியத்துவம் நிறைந்த நேரத்தில்தான், தஞ்சை தலைநகர், நம்மை—நம் நாட்டவரை — திராவிட மக்களை யெல்லாம்—பலப் பல கைகளையும் நீட்டி அழைக்கிறது!

புதுவையிலும், காரையிலும் வளர்ந்துவரும் உரிமை முழக்கம்—வெளிநாட்டானை வெளியேற்ற திராவிடர் தொடுத்துள்ள விடுதலைப் போர்—நமது ஆதரவையும் பெற்றதாகும். பிரெஞ்சுப் பகுதிகளில் வாழும் நமது தி. மு. கழகத் தோழர்கள் பலரும் உரிமைப் போரில், தியாகத் தீயில் தமது பங்கைச் செலுத்தியபடி உள்ளனர்!

எனவேதான், தஞ்சை மாநாடு, நிறைவேற்றவேண்டியுள்ள இன்றியமையாத பல தீர்மானங்களாலும், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாலும் மிகமிக முக்கியத்துவம் எய்துகின்றது

தோழர்களே! கூடுக தஞ்சையில்! ஆற்றுக கடமையை!

குடி தண்ணீர் வசதி

இந்தியா—அமெரிக்கா உதவி ஒப்பந்தங்கள்

விமானப் போக்குவரத்து சர்வீசுகளை விஸ்தரிக்கவும், தளங்களை நவீன முறையில் அமைக்கவும் ஆகிய இந்திய தண்ணீர் சப்ளை, சுகாதார பூர்வாங்க திட்டத்திற்கும் இந்திய - அமெரிக்கா இடையே இரு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

முதல் திட்டத்திற்கு 20 லட்சம் டாலரும், சுமார் 6 லட்சம் ரூபாயும் செலவிடப்படும்.

தண்ணீர் சப்ளை திட்டத்திற்கு சுமார் 31 லட்சம் டாலரும், $10\frac{1}{2}$ கோடி ரூபாயும் செலவிடப்படும்.

கிருமி சம்பந்தமான நோய்களைத் தடுப்பதில் கவனம் செலுத்தப்படும்.

இரு திட்டங்களுக்கும், டாலர் பகுதி செலவை அமெரிக்கா வழங்கும்.

இந்தியாவில் நிலக்கரி உற்பத்தி

புதுடில்லி, ஏப். 7—

1954 பிப்ரவரி மாதத்தில், 814 நிலக்கரிச் சுரங்கங்களிலும், 8 'கோக்' கரி உற்பத்திசாலைகளிலும் மொத்தம் 3,53,251 பேர்கள் வேலை பார்த்து வந்தனர்; இந்த எண்ணிக்கை முந்திய மாதத்தியதைக் காட்டிலும் 19,478 அதிகமாகும்.

பிப்ரவரி மாதத்தில் 30,55,847 டன் நிலக்கரியும், 3,16,674 டன் மிருதுவான கோக் கரி, கடினமான கோக் கரி, இதர கோக் கரி ரகங்கள் ஆகியவையும் உற்பத்தி செய்யப்பட்டன.

முகவரி மாற்றம்

ஆ. மீ. அலி சேக் மன்சூர், நூர் ஜஹான் நிலையம், 7-வது தெரு ஏர்வாடி (நெல்லை மாவட்டம்)

அணுகுண்டுகள் வீசப்படும்!

—:o:—

யுத்தம் மூண்டால் ஏற்படும் விளைவு!

லண்டன், ஏப். 6—

"யுத்தம் வந்தால் இரு தரப்பினரும் அணுகுண்டுகளையும், அது போன்ற ஆயுதங்களையும் பிரயோகிப்பார்களென்று நாம் உறுதியாக நினைப்பதாகவும், போர் துவக்கத்திலிருந்தே அணு ஆயுதங்கள் பிரயோகிக்கப்படுமென்றும் கருதுகிறேன்,"

—என்று ஐரோப்பாவில், அட்லாண்டிக் ஒப்பந்த உதவி சேனாதிபதியாயுள்ள மாண்ட்கோமரி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"எதிர்கால யுத்தத்தில் எதிரியுடன் நெருங்கி இருப்பதுதான் பாதுகாப்பானது என்றும், ஏனென்றால், தன்னுடைய சிப்பாய்களையே கொல்லக் கூடுமென்று பயந்து பாவலரான பிரதேசத்தில் மாநாசத்தை உண்டாக்கும் குண்டுகளை அங்கேயே போடமாட்டார்கள் அல்லவா?" என்றார்.

கொரியாவில் இந்தியாவின் செலவு

புதுடில்லி, ஏப். 6—

கொரியாவில் இந்தியப் பாதுகாப்பு படைக்கும், நடுநிலைமை கைதி பரிவர்த்தனை கமிஷனுக்கும் மொத்தம் ரூ. 94 லட்சம் இந்தியாவுக்குச் செலவாகியிருக்கிறதென்று மதிப்பிடப்பட்டிருப்பதாக உதவி தற்காப்பு மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

சாத்தியமில்லையாம்!

வாஷிங்டன், ஏப்ரல் 7—

இம்மாதம் நடக்கவிருக்கும் ஜினிவா மாநாட்டில் இந்தோசீனப் போரை சமரசமாகப் பைசல் செய்வதற்குப் போதிய சாத்தியக் கூறுகள் இல்லை என்று ஜனாதிபதி ஐசன்ஹவர் கூறியுள்ளார்.

நேப்பாளமும்-திபெத்தும்

திபெத்தின் மீது சீனாவின் ஆதிக்க உரிமையைத் தனது அரசாங்கம் ஏற்கவில்லை என்றும், திபெத்துக்கும், நேப்பாளத்திற்கும் உள்ள தொடர்பு—சீனாவின் தலையீடு இன்றியே நடைபெற்று வருவதாகவும் நேப்பாள பிரதமர், கொய்ராலா — நேற்று அறிவித்துள்ளார்.

புதுக்கோட்டை திருக்குறள் கழகம்

4—4—54ல் பேராசிரியர் சி. இலக்குவனார் தொல்காப்பியரைப் பற்றி சொற்பொழிவாற்றினார்.

தொல்காப்பியம் தமிழர்களின் பழமைபெரும் நூலென்றும், ஆராய்ச்சியாளர்கள் அந்நூல் 4000 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்டிருக்கலாமென்று கூறியுள்ளதை சான்றுகளுடனும் விளக்கிக் கூறினார்.

அகத்தியர், தொல்காப்பியர் ஆகியவர்களைப் பற்றி வழங்கும் கற்பனை வரலாறுகளை அவர்கள் தொன்மைக்கே இழுக்காக உள்ளது என்பதையும், அகத்தியர் கற்பனையாக உண்டாக்கப்பட்டவர் என்றும், சென்னை பல்கலைக் கழக நூலே வெளியிட்டிருப்பதையும் விளக்கியும் பேசினார்.

சிறப்புச் சொற்பொழிவு

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தின் சார்பில், 2—4—54 மாலை ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் மா. இளஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் சம்பத்தம் வரவேற்புரையாற்றினார். தோழர் க. அன்பழகன் அவர்கள், 'மொழியும் மக்களும்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்.

குழந்தைகளை பட்டினி போட்டுக் கொல்லும் பெற்றோருக்குத் தூக்குத் தண்டனை!

—o—

கடுமையான சட்டத்தை பிரான்ஸ் இயற்றியது

பாரிஸ், ஏப்ரல் 7—

மத நம்பிக்கையின் காரணமாக குழந்தைகளுக்கு வைத்தியம் செய்யாமல் சாகவிடுவோருக்கு இனி, பிரான்சில் தண்டனை விதிக்கப்படும்.

குழந்தைகளைக் கொடுமைப் படுத்தும் பெற்றோர்களைத் தண்டிப்பதற்காக பிரான்சில் ஒரு புதிய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

குழந்தைகளைப் பட்டினி போட்டுக் கொல்லும் பெற்றோர்களைத் தூக்கில் போட இது அனுமதிக்கிறது.

பிரான்சில் குழந்தைகள் அதிகமாய் இறப்பதாலும், அங்கஹீனமாவதாலும் இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

15 வயதிற்குக் குறைவான குழந்தையை அடிப்பவருக்கு அல்லது பட்டினிபோடுவோருக்கு 1 முதல் 5 ஆண்டு வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும். 20 நாளுக்குமேல் குழந்தை செயலற்றுப் போகும்படி பட்டினி போடும் பெற்றோருக்கு 10 ஆண்டு வரை சிறைவாசமும் 40 லட்சம் பிராங்க் அபராதமும் விதிக்கப்படும்.

மலானின் சவால்!

பிரிட்டன் என்ன செய்யும்

கேப்டவுன் ஏப்ரல் 7—

பெச்சுவானாலாந்து, பசுட்டோலாந்து, ஸ்வாஜிலாந்து என்ற மூன்று பிரதேசங்களையும் தென்னாபிரிக்க யூனியனில் இணைப்பதற்கு ஒரு பிரேரணையை தெ. ஆ. அசெம்பிளியில் சமர்பிக்கப் போவதாக டாக்டர் மலான் தெரிவித்தார்.

இப்பிரதேசங்களைத் தருமாறு மலான் முன்பு பலமுறை பிரிட்டனைக் கேட்டிருக்கிறார். சுதேசிகளின் சம்மதத்தைப் பெற்றே அவற்றைத் தரமுடியும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் கூறி இருக்கிறது.

வெள்ளைக்கார குமாஸ்தா பெண்ணை மணம் புரிந்துகொண்டதற்காக நாடு கடத்தப்பட்ட செரட்சேகாமாவின் நாட்டையும் மலான் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் 15 மாடி கட்டிடம்!

சென்னை, ஏப் 6—

சென்னையில் கட்டப்பட்டு வரும் ஒரு பதினைந்து மாடி கட்டிடத்திற்கு 60,000 பவுன் செலவில் மின்சார 'லிப்ட்' அமைக்கப்படுமாம்!

இந்த 'லிப்டு'கள் நிமிடத்திற்கு 500 அடி வேகத்தில், மேலும் கீழும் ஓடும்; கட்டிடத்தில் 5 லிப்டுகள் அமைக்கப்படும்.

'தென்னிந்தியாவிலேயே மிகவும் உயரமாக இருக்கக் கூடிய இந்தக் கட்டிடத்தை ஒரு இங்கிலீஷ் கம்பெனி நிர்மாணிக்கிறது.

பற்றாக்குறை பகுதிகளுக்கு உணவுத் தானியம்

புதுடில்லி, ஏப்ரல் 7—

மத்திய உணவு—விவசாய மந்திரி காரியாலயம், மார்ச் 22-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் நாட்டிலுள்ள பல்வேறு பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கு மொத்தம் 63,050 டன் உணவுத் தானியம் அனுப்பியிருக்கிறது.

இதில் பிரதானமாக, பம்பாய்க்கு 14,850 டன்னும், மேற்கு வங்காளத்துக்கு 13,800 டன்னும், திருவாங்கூர்-கொச்சிக்கு 13,100 டன்னும், சென்னைக்கு 10,050 டன்னும், டில்லிக்கு 2,650 டன்னும் கிடைத்தன. மற்ற எல்லாப் பிரதேசங்களுக்கும் மொத்தம் 9,100 டன் கிடைத்தன.

உங்களுக்குத் தெரியுமா?

கேள்விகள்:

1. ஐந்து ஆண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், பல்வேறு பாசன வேலைத் திட்டங்கள் மூலமாகப் புதிதாகப் பாசன வசதி பெற்றுள்ள பிரதேசங்களின் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு?
   (அ) 10 லட்சம் ஏக்கரா
   (ஆ) 20 லட்சம் ஏக்கரா
   (இ) 40 லட்சம் ஏக்கரா
2. அதிக மாசூல் தரக்கூடியவையும், உயர்தரமானவையுமான காய்கறி வித்துக்களை உற்பத்தி செய்துவரும் மத்திய காய்கறி உற்பத்திப் பண்ணை எந்த இடத்தில் இருக்கிறது?
   (அ) இமாசலப் பிரதேசத்தில் மண்டி என்ற இடத்தில்;
   (ஆ) குலு பள்ளத்தாக்கில் காகர் என்னுமிடத்தில்;
   (இ) சிம்லா குன்றுகளில் குப்ரி என்னுமிடத்தில்.
3. தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் 40 மைல் நீளமுள்ள நங்கல் ஜலமின் (ஹைடெல்) கால்வாய் மூலம் எப்பொழுது தண்ணீர் விடப்படும்?
   (அ) ஜூன் 1954;
   (ஆ) ஜனவரி 1955;
   (இ) ஏப்ரல் 1956.
4. 1954-ல் உற்பத்தி துவங்கவிருக்கும் இந்தியாவின் முதலாவது டி. டி. ட்டி மருந்துத் தொழிற்சாலை எங்கு நிறுவப்படுகிறது?
   (அ) பூனாவில்;
   (ஆ) பங்களூரில்;
   (இ) டில்லியில்
5. கேந்திர கிராமம் என்பது என்ன?
   (அ) சமுதாய அபிவிருத்தித் திட்ட கிராம ஊழியர்கள் தங்கள் அனுபவங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்வதற்காகக் கூடும் ஒரு கிராமம்
   (ஆ) 3 வயதுக்கு மேற்பட்ட சுமார் 500 பசுக்களைப் பராமரித்துவரும் மூன்று அல்லது நான்கு கிராமங்கள் கொண்ட ஒரு பிரதேசம்;
   (இ) நிலச் சுவான்தார்களும் விவசாயிகளும் ஒன்று கூடிப் பேசித் தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு நிலையம்.

விடைகள்:

1—(இ); 2—(ஆ); 3—(அ); 4—(இ); 5—(ஆ)

தமிழக ஆட்சி மொழி மாநாடு

★

11—4—54 ஞாயிறு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை, பெண்ணாடம், தென்னாற்காடு முத்துக்குமரம் பூங்காவில், தமிழக ஆட்சி மொழி மாநாடு முன்னாள் நீதிபதி ஆ. சபாபதி அவர்கள் தலைமையில் நடைபெறும். திறப்பாளர்: முன்னாள் முதலமைச்சர் ஓ. பி. இராமசாமி; தமிழ்க்கொடி ஏற்றுவோர்: கி. ஆ. பெ. விசுவநாதம்; தோழர்கள் ச. சோமசுந்தர பாரதியார். பன்மொழிப் புலவர் க. அப்பாதுரை, என் எஸ். இராமசாமி. எம் எல் ஏ., கோ. இரா; விசுவநாதம், எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொள்வர்.

நிதி நாடகம்

11—4—54 ஞாயிறு இரவு 10 மணிக்கு, விருதுநகர் ஏ. டி. பி. வண்டிப்பேட்டையில், விருதை அறிவியல் மன்றம் நிதிக்காக, தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் "இன்பக் கனவு" நாடகம் தோழர் வெ. வ. இராமசாமி தலைமையில் நடைபெறும்.

கடலூர் (ஒ. டி.) 2-வது வட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு

"11-4-54 மாலை 3 மணிக்கு கடலூர் பழைய நகர் 2-வது வட்டத்தில், 'தி. மு. கழகம் ஆரம்பம்-அமைப்பு' என்பது பற்றி யோசிக்க இருப்பதால், இரண்டாவது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் அண்ணா அன்பு நிலையத்திற்கு வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்," என, தோழர் எஸ். அஜீஸ் அறிவிக்கிறார்.

ஓரக்காட்பேட்டை தி.மு. கழக உறுப்பினர்களுக்கு

12—4—54 அன்று மாலை ஓரக்காட்பேட்டை தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் கழக அலுவலகத்தில் நடைபெறும். கழக ஆண்டு விழா பற்றியும், மற்றும் பல முக்கிய விஷயங்கள் பற்றியும் ஆலோசிக்கப்பட வேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் அவசியம் கலந்து கொள்ள வேண்டுகிறேன்," என்று செயலாளர் கு. மு. இளங்கோ அறிவிக்கிறார்.

'முஸ்லீம் லீக்' விரும்பப்படவில்லை!

வேறு கட்சிகள் தோற்றம்?

மேற்கு பாகிஸ்தானில் வளர்ந்து வரும் அரசியல் கருத்தின் பொதுப் போக்கு, "இனியும் 'முஸ்லீம் லீக்' கட்சி இருப்பதால், எவ்வித பயனும் இல்லை," என்பதாக உருவாகின்றது.

மேலும், பொருளாதாரச் சீர்திருத்தத் திட்ட அடிப்படையில் புதுக் கட்சிகள் தோன்ற வேண்டும் என்பதற்கும் ஆதரவு பெருகி வருகிறது.

கிழக்கு வங்காளத் தேர்தல் முடிவினால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்க, அவர்களது விருப்பத்தின்படி, புதிய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதை அனுமதிக்க முடியாது என்றே லீகர்கள் கருதுகின்றனராம்!

வங்காளத்திற்கு அந்த உரிமை அளித்தால், முன்னர் புது தேர்தல் நடத்திய எல்லைப்புற மாகாணம், பஞ்சாப் ஆகியவற்றிற்கும் அந்த உரிமை அளிக்கவேண்டி வரும் என்றும், விளைவு, பாகிஸ்தான், லீக் ஆட்சியையே இழப்பதாகும் என்றும் அஞ்சப்படுவதாகவும் தெரிகிறது.

தோழர் சங்கரன் தொண்டு

தோழர் பராங்குசம் பாராட்டு

"சுமார் 18 ஆண்டுகள் திருச்சி நகர சபை உறுப்பினராக இருந்து, திருச்சி மக்களுக்கு—குறிப்பாக அவரது வார்டு மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றி, ஏழை பாட்டாளி மக்களின் பேரன்பைப் பெற்றவர்.

"சுயமரியாதை இயக்கத்தின் துவக்க நாள் முதல் அதன் வழி நின்று திராவிடத்திற்கு பல தொண்டுகள் ஆற்றியவர்; அதன் பயனாக, 1—1—50ல் நடைபெற்ற திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாட்டின் வரவேற்புத் தலைவராகவும், சென்ற ஆண்டு மாவட்டச் செயலாளராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். குறிப்பாக அவர் திராவிட இயக்கத்திற்கு திருச்சியில் ஓர் தூண்! அந்தத் தூண் சாய்ந்துவிட்டது.

"ஓர் சிறந்த இயக்கத் தொண்டரை இழந்துவிட்டது திராவிடம்! என்ன செய்வது? கலங்குகிறோம் வேதனைப்படுகிறோம்! அவர் வழி நின்று பணிபுரிவோம் என உறுதிகொள்வோமாக!

"அன்னாரை இழந்து நிற்கும் அவரது தம்பி சாம்பு அவர்கட்கும், முதல் மகன் அபி அவர்கட்கும், குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்," என திருச்சி மாவட்ட தி. மு. கழகச் சார்பில், துணைச் செயலாளர் தோழர் பராங்குசம் தெரிவித்துக் கொள்கிறார்.

புதிய ஏடுகள்

தோழர் தில்லை வில்லாளன் 30—3—54 மாலை 3 மணிக்கு, கடலூரில் தென்னாற்காடு மாவட்ட அடிஷனல் மாஜிஸ்திரேட் முன்னிலையில், 'பூமாலை' என்ற இலக்கிய மாதப் பத்திரிகைக்கும், 'BROTHER' என்ற ஆங்கில வாரப் பத்திரிகைக்கும், அச்சிடுபவர் — வெளியிடுபவர்— ஆசிரியராகப் பதிவு செய்து கொண்டார்.

அரிசி விளைச்சல் உயர்வு

சென்னை, ஏப். 8—

1953—54ல், மாநிலத்தில் நெல் சாகுபடியான மொத்த நில விஸ்தீரணம் 63,78,000 ஏக்கரா என மதிப்பிடப்படுகிறது முன் ஆண்டு அது 56,8,100 ஏக்கராவாகத் தான் இருந்தது.

மொத்த அரிசி மகசூல் 29,75,000 டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. முன் ஆண்டில் அது 21,61,000 டன்னாக இருந்தது.

இந்தியாவில் 45,000 பேர்களுக்கு ஒரு தாதியரே உள்ளனர்!

— (:) —

இந்திய சுகாதார மந்திரியின் குறிப்பு

புதுடில்லி, ஏப். 7—

"நாட்டிற்குத் தாதியர்கள் தேவை அவசியமென்பதை வைதீகஇருக்கிறவர்களோடு கூறுவது அவசியம்; இப்பொழுது, இங்கு சராசரி 45,000 பேருக்கு ஒரு தாதி விகிதம்தான் இருக்கின்றனர்; அமெரிக்கா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் 200 பேர்களுக்கு ஒரு தாதி இருக்கின்றனர்; இந்தியாவில் தேகாரோக்கியத்தின் தரம் அபிவிருத்தி அடையாதிருப்பதற்கு தாதியர்கள் பற்றாக் குறையே காரணம்,"

என்று டில்லி நகரசபை கமிட்டி சார்பில் உலக சுகாதார விழா கொண்டாடப்பட்டபோது இந்திய சர்க்கார். சுகாதார மந்திரி கூறினார்,

வெறுப்பு தணிந்தது! வேதனை தீரவில்லை!!

"தொண்டு, தியாகம், ஆகியவற்றிற்கு பெயர் பெற்ற இந்தியப் பெண்கள், தாதியர்கள் தொழிலை ஏற்க முன் வரவேண்டும்; இன்னலுறும் நோயாளிகளிடம் அவர்கள் காட்டும் பொறுமை, தந்திரமாக நடந்துகொள்ளுதல் போன்ற குணங்களைப் பாராட்டவேண்டும்; அவர்களுடைய அலுவல் நேரம் ஒழுங்குபடுத்த வேண்டும்; அவர்கள் மகிழ்ச்சி தரும் சூழ்நிலையில் வசிக்க வேண்டும்; அவர்களுக்குத் தக்கபடி ஊதியம் அளிக்கப்பட வேண்டும்; விடுதலைக்கு முன்பு, இத் தொழிலிடம் காட்டி வந்த வெறுப்பு மிகவும் தணிந்துவிட்டதைக் காண மகிழ்ச்சி உண்டாகிறது; மேற்கொண்டு இத்தொழிலைக் கற்கப் பெண்கள் முன்வந்து கொண்டிருக்கின்றனர்,' என்று, இந்திய சர்க்கார் சுகாதார மந்திரி வாஜெலியில் பேசுகையில் தெரிவித்தார்,

---

சென்னை தமிழாசிரியர் கழக வேண்டுகோள்

இண்டர்மீடியட் 'டி' தமிழ்ப் பிரிவு பற்றிப் பல்கலைக் கழகத்தினருக்கும், அப்பகுதியை நடத்திவரும் கல்லூரிப் பொறுப்பினர்களுக்கும், விடுக்கும் வேண்டுகோள்:—

சென்னைப் பல்கலைக் கழகத்து இண்டர் மீடியட் 'டி' குரூப் என்னும் பிரிவு இருபது ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. தமிழ், தெலுங்கு முதலிய நாட்டு மொழிகளில் ஒன்றனுக்குரிய இலக்கியம், இலக்கணம் கட்டுரை, வரலாறு ஆகிய பாடங்கள் 'டி' குரூப் என்னும் அந்தப் பிரிவில் அமைந்து வருகின்றன. இண்டர் மீடியட்டில் இந்தப் பிரிவு எடுத்துப் பயிலும் மாணவர்கள் ஆங்கிலத்திலும் நாட்டு வரலாறு, இலக்கியம் முதலியவற்றிலும் நல்ல தேர்ச்சி பெற்று வெளியேறியிருக்கிறார்கள், மேற்கொண்டு பி ஏ (ஆனர்ஸ்), பி. ஏ., முதலான வகுப்புகளில் பயிலும்போது ஊக்கமும் மிகுந்து விளங்கியிருக்கிறார்கள்.

ஆனால் இப்பிரிவினைச் சீர்திருத்தும் முயற்சியின் பேரால்—சென்னைப் பல்கலைக் கழகம்—அதன் அமைப்பையே மாற்றிப் புதுவடிவம் அளிக்கத் தீர்மானித்திருக்கிறது. அதன் பயனாகத் தாய் மொழிப் பயிற்சியும் தேய்ந்து, தேவையில்லாத வகையில் படிப்பு கடினமாக்கப்படுகிறது என்பதைப் பல அறிஞர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். பல்கலைக் கழகம் அடுத்து என்ன முடிவு செய்யும் என்பதும் — பழைய திட்டத்தை மாற்றாமலே விட்டுவிட இசையுமா—அல்லது—இரண்டு ஆண்டு மட்டுமே விட்டுவைத்துப் பின்னர் மாற்றிவிடுமா என்பதும் விளங்கவில்லை. இந்நிலையில், 'டி' பிரிவு மாற இருப்பதால் — இப்பொழுது நடத்திவரும் கல்லூரிகளிலேயே சில—அப்பிரிவை ஏன் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று தவறுக் கருதுவதாகவும் அறிகிறோம்.

படிப்படியாக செல்வாக்குப் பெற்று வரும் இந்தப் பிரிவை மேன்மேலும் தொடர்ந்து கல்லூரியில் வைத்து நடத்துதல் நாட்டின் முன்னேற்றத்திற்குரிய நல்ல தொண்டும், மொழி வளர்ச்சிக்கும் காலத்தால் உதவும் உதவியாகும். ஆதலின், இப்பிரிவினை கல்லூரிகளில் தொடர்ந்து நடத்துமாறு கல்லூரிகளின் தலைவர் முதலிய நிர்வாகப் பொறுப்பினர்களையும், இப்பிரிவின் பழைய வடிவைப் பெரிதும் மாற்றிவிட வேண்டாமெனச் சென்னைப் பல்கலைக் கழகத்தினரையும் வேண்டிக் கொள்கிறோம்.

ஒழிக்க வேண்டியது பார்ப்பனியமே—பார்ப்பனர்களை அல்ல!

கண்ணியத்தை வளர்க்கவே கழகம் பாடுபடுகிறது

நாகைக் கூட்டத்தில் கருணாநிதி நடராசன் முழக்கம்

நாகை, ஏப். 5—

4—4—54 மாலை 6 மணிக்கு நாகை தி. மு. கழகச் செயலாளர் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின்: தோழர் என். வி. நடராசன் தி. மு. கழகத்தின் மும்முனைப்போராட்டம் பற்றி விளக்கிய பின், "இந்தியப் பிரதமர் நேரு சென்னை வந்த பொழுது நம்மைப் பார்த்துக் காட்டுமிராண்டிகள் என்ருர்; நான் கேட்கிறேன், யார் காட்டுமிராண்டிகள் என்று? கும்பமேளாவை நடத்தியவர்களா? நாங்களா? ஆசிய ஜோதியின் அருமை மருமகளிர்—விஜயலட்சுமி அம்மையின் குமாரிகள்—இலங்கைப் பிரதமர் கொத்தலாவலையின் கரங்களில் சிக்குண்டு, களிநடம் புரிந்து கலாச்சாரத்தை பரப்பினர்களே! அவர்களா? நாங்களா?" என்று கேட்டு நேருவின் கூற்றைக் கண்டித்தார்.

மேலும் பேசும்போது அவர் குறிப்பிட்டார்:

"பார்ப்பனர்கள் ஒழிய வேண்டும்—அவர்களைக் கொன்றுவிட வேண்டும் என்று தி. மு. கழகம் சொல்லவில்லை; அவர்கள், தம் கோணல் புத்தியை விட்டுவிட்டு, மனிதத்தன்மையுடன் மாறி வரவேண்டும்; அவர்கள் திராவிட நாட்டில் நிச்சயமாகவிருக்கலாம்—எப்படி?—உயர் ஜாதிக்காரராக இல்லாமல், முப்புரி நூல் உடையவராக இல்லாமல்—மதச் சின்னம் இல்லாமல், தான் பார்ப்பனன் என்ற அகந்தை இல்லாமல், மனிதனாக, பகுத்தறிவாளனாக மாறினால்—இந்நாட்டில் அவர்களுக்கு இடமுண்டு; தந்தை பெரியார் அன்று கூறியதுபோல, அவர்களிடமுள்ள பார்ப்பனியம் ஒழியவேண்டும்; இம்முயற்சியில், படித்த பார்ப்பன இளைஞர்கள் பணியாற்ற முன்வரவேண்டும்; இத்தகு முயற்சியில் நாகை தி. மு. கழகம் வெற்றி பெற்றிருக்கிறது—நாகை தி. மு. கழகச் செயற்குழுவில் ஒரு பார்ப்பன இளைஞர் உள்ளார்; அவர் பகுத்தறிவாளராக மாறிப் பணியாற்றி வருகின்ருர்; அவரைப் பின்பற்றி பார்ப்பன இளைஞர்கள் முன்வரட்டும்." என பேசி முடித்தார்.

அடுத்து தோழர் மு. கருணாநிதி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகம் வான் என்ருல், மாணவர் முன்னேற்றக் கழகம் அதன் கேடயம்! மாணவர்கள் அரசியலில் பங்கு பெறலாமா?—என்ற கேள்வி எழும்புகிறது. மாணவர்கள் நாட்டு நடப்புகளை, இந்நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளை, உலக அரங்கில் நடைபெறும் அரசியல் நடவடிக்கைகளை மிக, மிக உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும்; ஏனென்ருல், மாணவர்கள்தான் வருங்கால அரசியல் தலைவர்கள்" என்றும், மாணவர்கள் கட்டுமை பற்றியும் விளக்கிக் கூறினர்.

பின்னர், தி மு கழகத்தின் மும்முனைப் போராட்டம் பற்றியும் விளக்கிப் பேசுகையில், நாகை திராவிடர் கழக உதவிக் காரியதரிசியும், நாகை தாலுக்கா திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசியுமான தோழர் என். எஸ். பாட்சா என்பவர், திடீரென்று (அனுமதியின்றி) மேடை மீதேறி, தோழர் மு கருணாநிதியிடம், ஒரு கேள்வித்தாளைக் கொடுத்தார்.

"இப்படி அமைதியாக உட்கார்; பதில் சொல்லுகிறேன்" என்று நண்பர் கருணாநிதி கூறி தம் பேச்சைத் தொடர்ந்தார்.

மீண்டும் பாட்சாக் குறுக்கிட்டு, "என் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டுப் பேசு," என்று கூறவே, கூட்டத்தினர், "பாட்சா, கீழே இறங்கு; பாட்சாவை கீழே இறக்குங்கள்," என்று அவரது அநாகரிகச் செயலைக் கண்டித்து சப்தமிட்டனர்; பாட்சாவும், மற்றும் சிலரும் மேடையிலிருந்து கீழே இறக்கப்பட்டனர்.

மேடைமீது கற்கள் ஒரு சில வந்து விழுந்தன; கூட்டத்தில் பாட்சாவும், ஒரு சில தி. க. உறுப்பினர்களும் குழப்பம் விளைவித்தனர்.

பக்கத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷனிலிருந்த சப்-இன்ஸ்பெக்டரும், சில போலீசாரும் கூட்டத்திற்கு விரைந்து வந்தனர்.

சப்-இன்ஸ்பெக்டர் மேடை மீதேறி பொதுமக்களுக்கும், தி. க.-வினருக்கும பினவருமாறு எச்சரிக்கை செய்தார்:—

"கூட்டத்தில் அமைதியுடன் இருந்து கேட்க இஷ்டம் இருந்தால், கேளுங்கள்; இல்லாவிட்டால் எழுந்து செல்லுங்கள்; வேண்டுமானல், நீங்கள் நாளை கூட்டம் போட்டுப் பேசுங்கள்; அதை விட்டு விட்டுக் கூட்டத்தில் கலாட்டா, குழப்பம் செய்தால் நீங்கள் கைது செய்யப்படுவீர்கள் என எச்சரிக்கை செய்கிறேன்; யார் கூட்டம் நடத்தினாலும் சரி, கூட்டத்தை அமைதியாக நடக்கச் செய்வது எங்கள் பொறுப்பு,' என மூன்று முறை கூட்டத்தினருக்கு எச்சரிக்கை செய்தார்.

கூட்டம் மீண்டும் அமைதியுடன் ஆரம்பமாயிற்று.

தோழர் கருணாநிதி மீண்டும் தம் பேச்சைத் தொடர்ந்தார்:—

"இன்று இங்கு நடைபெற்றது எங்களுக்குள் ஏற்பட்ட குடும்பச் சண்டை; தந்தை—தனையனுக்குள் —ஏற்பட்ட சிறு பூசல்," என்று கூறி திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கத்திலிருந்து கடைப்பிடித்து வரும கண்ணியத்தை விளக்கிக் கூறினர்.

மேலும் அவர் பேசும்போது, "ஆச்சாரியார் ஆட்சிதானே என்னைப் பேசாதே என்கிறது என்ருல், அழகிரி பரம்பரையில் வந்த என்னை, திராவிடக் கழகத்தின் பாட்சாவும் பேசாதே என்கிருரே? நான் கேள்விக்கு பதில் சொல்லப் பயப்படப் போகிறேன்? பாட்சா பெரியார் கூறிய பகுத்தறிவின் வழியைப் பின்பற்ருமல் இப்படி நடந்து கொண்டாரே எனபதற்குத்தான் நான் வருந்துகிறேன். இதைவிட பாட்சா என்னை குத்திக் கொன்றிருக்கலாம்! பாட்சாவும் தி. க. தோழர்களும் என்னையா அடிக்க வந்தனர்? ஏ! திராவிட சமுதாயமே! உன்னையே நீ அடித்துக் கொண்டாய்; பாட்சா தன்னையே அடித்துக் கொள்ள முன்வந்துள்ளாரே என்றுதான் வருந்துகிறேன்" எனக் கூறினர்.

பாட்சா மீண்டும் எழுந்திருந்து குழப்பம் விளைவிக்கவே, போலீசார் தலையிட்டுப் பாட்சாவையும், சில தி. க. தோழர்களையும் அப்புறப்படுத்தி அழைத்துச் சென்று, போலீஸ் ஸ்டேஷனில் வைத்தனர்.

பின்னர், தோழர் கருணாநிதி கழகத்தின் கண்ணியம், கட்டுப்பாடு பற்றி மேலும் 1 மணி நேரம் பேசியபின் கூட்டம் நன்றி கூறலுடன் இனிது கலைந்தது.

கயானா மக்கள் மீது கண்ணீர் புகை

போலீஸ் அடக்குமுறை

ஜார்ஜ்டவுன், ஏப். 8—

கயானா மக்கள் முன்னேற்றக் கட்சி அலுவலகத்தின் முன்பு கூடியிருந்த 300 பேர் கொண்ட கூட்டத்தினர் மீது போலீசார் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்தனர்.

டாக்டர் ஜெகன் முதலிய தலைவர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டதால், கொதிப்படைந்த மக்கள் போலீசார் மீது கற்களையும், சோடா புட்டிகளையும் வீசி எறிந்தனர்.

50 பேர் கைது

கவர்னர் மாளிகையின் முன், சட்ட விரோதமாகக் கூடினர் என்று குற்றம் சாட்டப்பட்டு 50 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதைக் கண்டிக்கவும், போலீசாரின் மிருகத்தனமான போக்கை எதிர்த்தும், அவசரச் சட்டங்களைத் தகர்க்கவும், பொதுவேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறும் மக்கள் முன்னேற்றக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெனட் ஜகன் அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

ஜிபார்ஜ்டவுன் பிரதம நீதிபதி செட்டி ஜகனை மீண்டும் ஜாமீனில் விட மறுத்தார்.

ஜகன் சிறை மாற்றம்

டாக்டர் ஜகன், தன்னை விசாரணை செய்யும் நீதிபதியிடம், தன்னை அதிக நெருக்கமான 12 சதுர அடி உள்ள ஒரு அறையில் சிறை வைத்திருப்பதாயும், அங்கு சுகாதாரம் முதலிய நிலைகள் படு மோசமாயிருப்பதாயும் புகார் செய்ததின் பேரில் அவரையும், குற்றம் சாட்டப்பட்டுள்ள அவர் சகாக்களையும், ஜியார்ஜ் டவுன் சிறைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டார்.

விமானங்கள் நொறுங்கின!

30 பேர் மாண்டனர்

மன்ஜா, (கனடா) ஏப். 8—

இங்கு, இரு விமானங்கள் விபத்திற்குள்ளாகி தீ பிடித்து நொறுங்கி விழுந்ததினால் சுமார் 30 பேர் இறந்ததாகத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. இடிபாடுகளுக்கு இடையில் 16 சடலங்கள் எடுக்கப்பட்டனவாம்.

நாட்டுக்குத்........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அடங்கிய அந்த அறிக்கையில், 'கிராமவாசிகள் உழவர்களும், குடிசைக் கைத்தொழிலும் செய்பவர்களுமாக இருப்பதால், அவர்களுடைய குழந்தைகளின் உதவி அவர்களுக்கு தேவையாயிருக்குமா?" என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது.

புதிய கல்வித் திட்டத்தை மாற்றியமைக்கவும் அதை ஆந்திராவுக்கு ஏற்ற முறையில் திருத்தவும் பொதுமக்களின் அபிப்பிராயத்தை கோரியிருக்கிறது, ஆந்திர ஆரம்ப கல்விக் கமிட்டி.

"நம் நாடு" வெளியூர் ஏஜெண்டுத் தோழர்கட்கு:

"நம் நாடு" வெளியூர் ஏஜண்டுத் தோழர்கட்கு: மார்ச்சு மாதப் பட்டியல் ஏப்ரல் முதல் தேதி அனுப்பியுள்ளோம். ஏப்ரல் 10-ந் தேதிக்குள் பில் பாக்கியை அனுப்பி வைக்க வேண்டுகின்ருேம்.

பழைய பாக்கியுள்ள தோழர்களும், டிபாசிட் தொகைக்கு மேல் அதிகம் பாக்கியுள்ள ஏஜண்டுத் தோழர்களும் மேலும் காலம் கடத்தாமல் பாக்கியை உடன் அனுப்பி வைக்க வேண்டுகின்ருேம். இன்றேல், "நம் நாடு" இதழ் அனுப்புவதையும் நிறுத்தி, வேறு ஏஜண்டை நியமிக்கும்படி நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதையும் உணர்ந்து நடந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்ருேம்.

இராயபுரம், சென்னை
7—4—54

பொறுப்பாளர்,
'நம் நாடு'

ஊழியர்கள் வாழ்க்கை வசதி ஏட்டளவில் இருக்கக்கூடாது

செயல் சக்தி படைத்த சமூகத்தில் குறைந்தபட்ச கூலி விகிதம் ஆரம்ப முயற்சியேயாகும்

தொழிலாளர் எதிர்காலம் பற்றி வி. வி. கிரி

பம்பாய், ஏப். 8—

"குறைந்தபட்ச கூலி விகிதம் ஏட்டளவில் இருந்து விடாமல், ஒவ்வொரு தொழிலாளியும் உண்மையிலேயே பெற்று அனுபவிப்பதாக இருக்க வேண்டும்; முன்னேறிக் கொண்டே ஒரு சமூகத்தில், குறைந்தபட்சக் கூலி விகிதமானது, அடுத்த நியாயமான கூலி விகிதத்திற்கு ஒரு முதற்படியேயாகும்; இவ்வாண்டு இறுதிக்குள், குறைந்தபட்ச கூலி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுவிட வேண்டும்," என்று, குறைந்தபட்ச கூலி விகிதங்களை நிர்ணயிப்பதற்கான மத்திய ஆலோசனை போர்டின் இரண்டாவது கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் வி. வி. கிரி குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னர்:—

"தொழிலாளர்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியம் கிடைக்கும்படி செய்ய ஒவ்வொரு முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசியல் சட்டம் பணித்துள்ளது; செயல் சக்தி படைத்த சமூகத்தில் குறைந்தபட்ச சம்பள நிர்ணயம், ஒரு ஆரம்ப முயற்சியேயாகும்—பின்னல் வரவிருக்கும் நியாயமான சம்பள நிர்ணயத்துக்குமுன் உத்தரவாதம் போன்றதாகும்."

"இந்நாட்டிலுள்ள தொழிலாளர் ஒவ்வொருவரும், நியாயமான கூலி வசதிகளைப் பெற்று அனுபவிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றே நான் திடமாக நம்புகிறேன்; ஆனல், கடினமான உழைப்பின் மூலமும், உற்பத்தியைப் பெருக்குவதின் மூலமுமே நாம் இதை அடைந்தாக வேண்டும்," என்ருர்.

ஜன நாயகப்........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கத்தா வங்காளிகளுக்கும் எப்படிச் சொந்தமானதோ, அப்படித்தான் பம்பாய் மகாராஷ்டிரர்களுக்குச் சொந்தம்; இந்த பிரத்யட்ச உண்மையை மறைத்து பம்பாயின் அழகு கெடாமலிருக்க அது தனி மாகாணமாக வேண்டுமென்று பம்பாய் காங்கிரஸ் தலைவர் பட்டீல் கூறுவதின் நோக்கமென்ன?

"குஜராத்திகள் பம்பாயில் இருப்பதில்தான் அது அழகும் பல்வேறு இனமும் வாழும் நாகரீக நகரமாகிறதா? பட்டீலின் விபரீத யோசனையை அவருடன் நெருக்குநேர் மகாராஷ்டிர தலைவர்கள் கட்சி வேற்றுமையின்றி கலந்து பேசினல் ஒழிய எப்படி மாற்ற முடியும்?

"ஆகவே காங்கிரஸ் செயற்குழுவின் முடிவு, நிலைமைக்கு முரணை மாத்திரமல்ல, ஜனநாயகமானதுமல்ல," என்று கூறினர் சங்கர் ராவ் தேவ்.

'காமராசர்..........'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்ந்தெதிர்க்கும் பொறுப்பில், காமராசர் ஈடுபட்டுள்ளார்.

தமது மந்திரி சபையில் யார் யார் இருப்பார்களென்று, காமராசர் ஏதாவது தெரிவித்தாரா என்று கவர்னரை வினவியபோது "இல்லை, என்றும், அவர் முன்புள்ள இப்பிரச்சினை இலகுவானது அல்ல என்றும், தாம், அவருடன் பரிபூரணமாக ஒத்துழைப்பதாகக் கூறியதாகவும் கவர்னர் தெரிவித்தார்.

"காங்கிரஸ் தலைமையின் ஒப்புதலுக்கு அவருடைய மந்திரி சபையினர் பட்டியலை அனுப்புவாரா?" என்று காமராசர் கேட்கப்பட்டதற்கு, "இது பூர்வாங்கமான விஷயம்; தாம் சமர்ப்பிக்கலாம், அல்லது சமர்ப்பிக்காமலுமிருக்கலாம்," என்று அவர் பதிலளித்தார்.

இந்தியாவுக்கு பர்மா தரவேண்டிய கடன்

ரூ 20 கோடியாகக் குறைந்தது

புதுடில்லி, ஏப். 8—

இந்தியாவுக்கு பர்மா கொடுக்க வேண்டிய கடன் தொகை சம்பந்தமாக நடைபெற்றுவந்த கடிதப் போக்குவரத்துகளின் மூலம் பர்மா இந்தியாவுக்குக் கொடுக்க வேண்டிய கடன் ரூ. 20 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதை இரு சர்க்கார்களும் ஒத்துக் கொண்டன. இதைப் பற்றிய கடிதப் போக்குவரத்துக்கள் மக்கள் சபையில் வைக்கப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத் துணைக் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்கள், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டுப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: ...